முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1129

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.11.2022, செவ்வாய்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞானிகள்தனை உருவாக்க தான தரும் சக்தி கொண்டு
ஞானவானாய் கலியினில் அவதாரம் புரிந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 15 ம் நாள் 01.11.2022 செவ்வாய்கிழமை)
வரமென என் சக்தி உன்னுள்ளே
வல்லமை கூடி நாளும் பெருகி வர
3. வருகின்ற இந்த காலங்கள்
வையகத்தில் உன் தவ பூர்த்தியோடு
பெருமைமிக்க இந்த பேருலகை
பிரணவ சித்தி கொண்டு ஞான லோகமாக
4. ஆகவே மாற்றுகின்ற அற்புதங்கள்
ஆளுமைகள் ஞான ஆட்சியாகவும்
வலுவான ஞானத்தலைமைகள் கூடி
வையகமே ஞானிகள் நிரம்பிய ஞானசித்தர் காலமாக
5. ஆகவே மாற்றம் நிகழ இருக்க
அரங்கனே உன்னுள் யானிருக்கேன்
அற்புதத்தை நாளும் நடத்துகின்றேன்
வரமென உன் தொண்டர் படைகள்
6. வல்லமைபட நம்பிக்கை மிகுதிகொண்டு
அறம் எனும் உன் அன்னதான சக்தியை அகிலமெங்கும் பரப்பி வந்தால் போதும்
போதுமப்பா சூட்சுமமாய் யானிறங்கி புண்ணியவான்களாய் உலகோரை மாற்றி
பேரிடர் பிறதுன்பம் அனுகாவண்ணம்
7. சரவணச்சுடராகி எங்கும் பரவி
சக்திமிகு ஞான ஆட்சிக்காலத்தை
சரவணப்பெருமான் யான் நடத்தி அருள்புரிவேன
சாற்றிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–